களும் தேவைப்படுகிறது என்று சொல்லி, மருத்துவப் பணி இயக்குநர் அவர்களுக்கு கடந்த 23–3–1990-லே கடிதம் எழுதி இருக்கிறார்கள். அரசு அவைகளைக் கவனத்தில் கொண்டு மாவட்ட மருத்துவமனையாக இருக்கின்ற காரணத்தி னாலேயும், ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கிற ஒரு இடமாக இருக்கின்ற காரணத்தினாலேயும் அரசு அதற்கு உரிய சில முன்னுரிமை கொடுத்து, நிதியை ஏற்பாடு செய்து, அவர் களை உடனடியாக நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 மருந்தாளுநர்கள் கூடுதலாக நியமிப்பதற்கு இன்றைக்கு அரசினுடைய கூடுதல் செலவு, உடனடிச் செலவாக 1.9 இலட்சமும், இறுதிச் செலவாக 2.9 இலட்சமும் ஆகும். ஏறத்தாழ 5 இலட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்குச் செலவாகும். ஆகவே அதைக் கருத்தில் கொண்டு அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக எண்ணிக்கையை உயர்த்த அரசு பரிசீலனை செய்யும்.

அண்ணா நினைவாலயம்

* 10003—திரு. டி. கே. பழனிசாமி

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை, அண்ணா நினைவாலயத்தைப் பார்வையிடச் செல்லும் பொதுமக்கள் காலணிகளை வெளியில் கழற்றிவிட்டு செல்ல வேண்டி இருப்பதால், கடுமையான வெயில் காரணமாக அவர்கள் இன்னல்படுவதைத் தவிர்க்க அங்கு தரைவிரிப்பு வசதி செய்ய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை அண்ணா நினைவர்லயத்தில் தரை விரிப்பு வசதி செய்யப்படுமானால், நினைவாலயத் தரைப் பகுதியில் பதிக்கப்பட்டுள்ள சிறப்பு வாய்ந்த கருப்பு சலவைக்கல் மற்றும் சாகாபாத் கல் ஆகியவற்றின் தோற்றத்தைப் பொது மக்கள் கண்டுகளிக்க இயலாது. மேலும் அண்ணா நினை வாலயத்தில் பொதுமக்கள் நடைபாதைப் பகுதியில் நிழல் தரக் கூடிய கொடிப்பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளதால் வெயிலின் கொடுமை குறைகிறது. எனவே அங்கு தரை விரிப்பு அமைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

1990 மே 12]

9.45 மணி.

திரு. டி. கே. பழனிச்சாமி : தலைவரவர்களே ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை என்றால் விட்டு விட வேண்டியதுதானே ?

திரு. டி. கே. பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்றால் விட்டுவிட வேண்டியதுதான். ஆனால், அங்கே மக்கள் படும் துயரத்தை நான் கண்ணால் கண்டேன். அதன் காரணமாகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேனே யொழிய, அண்ணாவினுடைய சமாதிக்கு அப்படி ஒரு தரை விரிப்பு தேவையில்லை என்றால் ஓ.கே., ரைட்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரொம்ப மகிழ்ச்சி.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணா சதுக்கத்திற்குச் செல்லக்கூடிய பயணிகள் அல்லது பார்வையிடக்கூடிய பொதுமக்கள் அங்கே விடக்கூடிய காலணிகளுக்குக் கட்டணம் வசூலிக்காமல் இலவசமாகவிடக்கூடிய ஏற்பாடு அரசின் மூலமாகச் செய்யப்படுமா என்று கேட்க ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படியே போய், கடைசியிலே செருப்புக் கடைக்குப் போய் விடுவோம், வேண்டாம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு: பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா நினைவாலயம் என்று பெயர் வந்தபிறகு அங்கே தரை விரிப்பிற்கோ அல்லது காலணியை எங்கே போடுவது என்ற பிரச்சினைக்கோ இடமில்லை என்பதை மாண்புமிகு திரு. பழனிச்சாமி அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அறிவித்ததே போதும் என்று அமைச்சர் கருதுகிறார்.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா நினைவாலயம் போன்ற வழிபாட்டுத் தலங்களுக்கு — தாஜ்மகால் போன்ற இடங்களில் அங்கு செல்கின்றவர்களுக்குக் கட்டணத்துடன் கூடிய காலுறைகள்

வழங்குகிறார்கள், அதுபோல தரை விரிப்பு செய்ய வசதி இல்லாவிட்டாலும். காலுறைகளையாவது வழங்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காலுறைகளை வழங்குவதோ, தரை விரிப்பு அமைப்பதோ எதுவுமே அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒரேயடியாக அடித்து விட்டால் பிரச்சினை கிடையாது.

திரையரங்குகளில் தமிழக அரசு செய்திப் படங்கள்

* 10120—திரு. வ. முல்லைவேந்தன்

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரும்பாலான திரையரங்குகளில் தமிழக அரசு செய்திப் படங்கள் காண்பிக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு, கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற்கேற்ப திரைப்படம் காட்டியே பொருள் சேர்ப்பவர்கள், தமிழக அரசினுடைய செய்திப் படங்களைப் பெரும்பாலான திரையரங்கு